RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 13 ஜனவரி.19 2026 திங்கள்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# சிறந்த இலக்கிய படைப்புகளுக்கு "செம்மொழி இலக்கிய விருது"

சென்னை: ஜன.19-

"தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா, வங்காளம் மற்றும் மராட்டிய மொழிகளில் வெளியாகின்ற தலைசிறந்த இலக்கிய படைப்புகளுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் ஆண்டுதோறும் "செம்மொழி இலக்கிய விருது" என்ற தேசிய அளவிலான விருதுகள் வழங்கப்படும். விருதுடன், தலா ரூ. 5 லட்சம் பரிசுத்தொகையும் வழங்கப்படும்" என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவின் நிறைவு விழாவில் உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின், மனித இனம் தன்னுடைய சிந்தனைகளை, தான் சேர்த்த அறிவுச் செல்வத்தை, பிறருக்கும், அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் கொண்டு சேர்க்கும் கருவிதான், புத்தகங்கள்!

வாசிப்பு மூலமாக, தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு வீட்டிலும் அறிவுத்தீ பரவ வேண்டும் என்று, ஏராளமான முன்னெடுப்புகளை நம்முடைய திராவிட மாடல் அரசு சார்பில் எடுத்து செய்து கொண்டிருக்கிறோம்! அதில் முக்கியமானது தான், புத்தகத் திருவிழாக்கள்!

எழுத்தாளர்கள் பதிப்பாளர்கள் விற்பனையாளர்கள் ஸ்ரீ வாசகர்கள் என்று எல்லோருக்குமான உறவுப் பாலமாக, இந்த புத்தகத் திருவிழாக்களை சிறப்பாக நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்!

தலைநகரான சென்னையில் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து மாவட்டங்களிலும் புத்தகத் திருவிழாக்களை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறோம். இதன் தொடர்ச்சியாகதான், இந்த நான்காவது சென்னை பன்னாட்டு புத்தகத் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

102 நாடுகளின் பங்கேற்போடு சிந்தனையின் ஊற்றாக, பண்பாட்டின் கருவூலமாக, அறிவுப் பரிமாற்றத்தின் அடித்தளமாக, இந்த பன்னாட்டு புத்தகத் திருவிழா நிறைவடைந்ததில் தமிழ்நாடு முதல்வராக மட்டுமல்லாமல், புத்தக ஆர்வலனாகவும் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்! அதுவும் சர்வதேச புக்கர் பரிசை வென்ற கன்னட பெண் எழுத்தாளர் பானு முஷ்டாக், இந்த மேடையில் இருப்பது என்னுடைய மகிழ்ச்சியை மேலும் கூட்டுகிறது!

"ஏற்கனவே, ஒய்.எம்.சி.ஏ. திடலில், ஒரு புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறதே, அப்படியானால், இந்த பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவின் மைய நோக்கம் என்ன?" என்று சிலர் நினைத்துக் கொண்டிருக்கலாம். அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, இந்தப் புத்தகத் திருவிழாவில்

மொழிபெயர்ப்புகள், பதிப்புரிமை பரிமாற்றம் ஆகியவற்றில்தான் மிகுந்த முக்கியத்துவம் செலுத்தியிருக்கிறோம்! அது எவ்வளவு அவசியம் என்பதற்கு இங்கே வந்திருக்கக்கூடிய பானு முஷ்டாக் அவர்களின் வெற்றியே ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது! ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டதால்தான் அவருடைய "ஹார்ட் லேம்ப்" நூலும், தென்னிந்தியப் பெண்களின் வாழ்வுரிமை வாழ்க்கையும், உலக அளவில் கவனம் பெற்றிருக்கிறது!



நம்முடைய திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த, சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த, பிற்போக்குத்தனங்களை எதிர்க்கின்ற, சமூகநீதிப் பார்வை கொண்ட, ஒரு பெண் எழுத்தாளரின் வருகையால் நம்முடைய புத்தகத் திருவிழா இன்றைக்கு மிகுந்த சிறப்படைந்திருக்கிறது! எதையும் கேள்விகேட்டு, விமர்சனப் பார்வையுடன் அணுகி, பழமைகளை பொசுக்கிய திராவிட இயக்கம் தமிழ்நாட்டை பண்படுத்தியது! அதேபோல, கர்நாடகத்தில், கன்னட புரட்சி இலக்கிய மரபில் இயங்கி வருகின்ற பானு முஷ்டாக், நம்முடைய அழைப்பை ஏற்று வருகை தந்தமைக்காக என்னுடைய நன்றியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!

ஜெர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அமீரகம் இப்படி, உலகத்தின் பல பகுதிகளில், இது போன்ற பன்னாட்டு புத்தகத் திருவிழாக்கள் நடைபெறுகின்ற செய்திகளை நான் பார்ப்பதுண்டு. அப்போதெல்லாம் இப்படிப்பட்ட முன்னெடுப்புகள், தமிழ்நாட்டிலும் நடைபெற வேண்டும் என்று நான் நினைப்பேன்! அந்த எண்ணத்தை இப்போது நம்முடைய திராவிட மாடல் அரசில் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்!

நம்முடைய மண்ணின் சிந்தனைகளும், எழுத்துகளும் உலகம் முழுக்கப் பரவவேண்டும்; உலகின் உயரிய சிந்தனைகள் நம்முடைய மக்களிடம் வந்தடைய வேண்டும் என்ற கனவு இந்த நிகழ்ச்சியால் நனவாகியிருக்கிறது! மொத்தத்தில் இப்படியொரு அறிவுச் சங்கமத்தை வெற்றிகரமாக நடத்தியிருக்கின்ற பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் உள்ளிட்ட அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

இலக்கியத்திற்கு எல்லைகள் கிடையாது! திருவள்ளுவரின் அறமும், இளங்கோ அடிகளின் காப்பியமும், பாரதியின் கவிதைகளும், பாரதிதாசனின் கருத்துக்களும் உலகமெல்லாம் ஒலிக்கவேண்டும்.

அதே வேளையில், உலகத்தரம் வாய்ந்த அறிவியல் மற்றும் இலக்கியப் படைப்புகள், எளிய தமிழில், நம்முடைய கிராமத்து மாணவர்களுக்கும் கிடைக்க வேண்டும். இதற்காகவே நம்முடைய அரசு, 'தமிழ்நாடு மொழிபெயர்ப்பு முகமை' மூலம் பல கோடி ரூபாய் நிதியை ஒதுக்கித் தந்து, கடந்த 3 ஆண்டுகளில், நூற்றுக்கணக்கான நூல்கள் இதன் மூலமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

இந்தப் புத்தகத் திருவிழாவில் நடைபெறும் 'பதிப்புரிமைப் பரிமாற்றம்' வெறும் வணிகம் கிடையாது; இரு மொழிகளுக்கு இடையே நடைபெறுகின்ற பண்பாட்டுக் கைக்குலுக்கல்! செம்மொழியான தமிழின் சங்க இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் வரை உலக மக்களுக்கு சென்று சேரவேண்டும்! இந்த நிலப்பரப்பிலிருந்து எவ்வளவு ஆழமான, பரந்த சிந்தனை கொண்ட கருத்துக்கள், இலக்கிய, இலக்கண மரபுகள் உருவாகியிருக்கிறது என்று நாம் உணர்த்த வேண்டும்!

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மூலமாக, சிறந்த தமிழ்ப் படைப்புகளை ஆங்கிலம், பிரெஞ்ச், ஜெர்மன் மற்றும் ஸ்பானிஷ் உள்ளிட்ட 20 க்கும் மேற்பட்ட மொழிகளில், மொழிபெயர்க்க நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். கி.மி. கோலோச்சும் இந்த காலத்தில், புத்தகங்களையும், நவீனத் தொழில்நுட்பத்தையும் இணைக்க வேண்டிய அவசியத்தையும் எடுத்துகாட்டுவதாக இந்த அரங்கம் சிறப்பாக அமைந்திருக்கிறது.

இங்கே வந்திருக்கின்ற உலகப் பிரதிநிதிகளுக்கு நான் ஒரு செய்தியை அழுத்தமாக சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாடு என்பது நீங்கள் தொழில் முதலீடு செய்ய மட்டும் உகந்த மாநிலம் இல்லை; அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கும் மிகச் சிறந்த மாநிலம். கீழடி முதல் பொருநை வரை கண்டெடுத்த தொல்லியல் சான்றுகளை பாருங்கள்; தமிழ்ச் சமூகத்தின் அறிவு மரபு எப்படிப்பட்டது என்பது அப்போது புரியும்!

உலக நாடுகளின் சிறந்த படைப்புகளைத் தமிழில் கொண்டு வாருங்கள்; அதேபோல, மனிதநேயத்தையும், சமூகநீதியையும் பேசுகின்ற எங்கள் திராவிடக் கருத்தியல் இலக்கியங்களையும் உங்கள் நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்துங்கள்; எழுத்தாளர்கள் உலகை வெல்வதை பெருமிதத்தோடு எதிர்நோக்கி அனைவரும் காத்திருப்போம்.

மொழி என்பது பிரிக்கக்கூடிய சுவர் இல்லை, அது உலக மக்களை இணைக்கும் பாலம். புத்தகங்கள் வெறும் பேப்பர் கிடையாது! அவை ஒரு தலைமுறை, மற்றொரு தலைமுறைக்கு விட்டுச் செல்லும் அறிவுச் சொத்து.

மனதுக்கு நெருடலாக ஒரு செய்தி தலைநகர் தில்லியில் இருந்து சில நாட்களுக்கு முன்பு வந்தது. உங்களுக்கெல்லாம் தெரிந்திருக்கும். 2025ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதெமி விருதுகள் இறுதி செய்யப்பட்டு, அறிவிக்கப்பட இருந்த நிலையில், ஒன்றிய அரசின் கலாச்சாரத் துறை தலையீட்டால், விருது அறிவிக்கும் நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இனி, அது நடக்குமா? என்றும் தெரியவில்லை. கலை இலக்கிய விருதுகளில் கூட அரசியல் குறுக்கீடுகள் செய்வது ஆபத்தானது. இப்படி ஒரு சூழலில், தமிழ்நாடு அரசு ஆக்கப்பூர்வமான, உரிய எதிர்வினையை ஆற்றவேண்டும் என்று, பல்வேறு எழுத்தாளர்களும், கலை இலக்கிய அமைப்புகளைச் சார்ந்தோரும் என்னிடம் கோரிக்கை விடுத்திருந்தார்கள். இது, காலத்தின் தேவை என்று நாங்களும் உணர்ந்தே இருக்கிறோம்.

அதன்படி, உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கின்ற ஒரு அறிவிப்பை இந்த மேடையில் வெளியிட விரும்புகிறேன்.

குறிப்பிட்ட இந்திய மொழிகளில் வெளியாகின்ற, தலைசிறந்த இலக்கிய படைப்புகளுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில், ஆண்டுதோறும் தேசிய அளவிலான விருதுகள் வழங்கப்படும். இதனை அறிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். முதல்கட்டமாக, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா, வங்காளம் மற்றும் மராட்டிய மொழிகளில் வெளியாகின்ற தலைசிறந்த படைப்புகளுக்கு ஆண்டுதோறும் "செம்மொழி இலக்கிய விருது" என்ற பெயரில் அந்த விருது வழங்கப்படும். விருதுடன், தலா 5 இலட்சம் ரூபாய் பரிசுத்தொகையும் வழங்கப்படும்.

படைப்புகளின் இலக்கிய தரத்தையும், வெளிப்படையான தேர்வு முறையையும் உறுதி செய்யும் விதமாக புகழ்பெற்ற எழுத்தாளர்கள், விருதாளர்கள் அடங்கிய குழு ஒவ்வொரு மொழிக்கும் தனியே அமைக்கப்படும். புரவலர் பணியை தமிழ்நாடு அரசு மனநிறைவோடு மேற்கொள்ளும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில், அமைச்சர்கள் சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், பானு முஸ்தாக், தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் லியோனி, கவிஞர் வைரமுத்து உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பொங்கல் பண்டிகை விடுமுறை முடிந்து சென்னைக்கு படையெடுத்து வரும் வாகனங்கள்: மதுராந்தகத்தில் 5 கி.மீ. போக்குவரத்து நெரிசல்

சென்னை, ஜன.19-

பொங்கல் தொடர் விடுமுறை முடிந்து பொதுமக்கள் சென்னைக்கு திரும்புவதால் அனைத்து முக்கிய சாலைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. பேருந்துகள், ரயில்களில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.

பொங்கல் பண்டிகையையொட்டி, ஜனவரி14 முதல் 18ம் தேதி வரை தொடர்ச்சியாக 5 நாட்கள் தமிழக அரசு விடுமுறை அளித்தது. பொதுவாக பண்டிகை காலங்களில் சென்னையில் கல்வி, தொழில், வேலை நிமித்தமாக தங்கி இருக்கும் லட்சக்கணக்கான மக்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு படையெடுப்பது வழக்கம். அந்த வகையில் இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழகத்தில் தொடர்ந்து விடுமுறை அளிக்கப்பட்டதால் சென்னையில் இருந்து லட்சக்கணக்கான மக்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு பயணம் செய்தனர்.

சொந்த ஊர் சென்ற மக்களின் வசதிக்காக ஆயிரக்கணக்கான சிறப்பு பஸ்கள் மற்றும் ரயில்கள் இயக்கப்பட்டது. இது மட்டுமல்லாமல் ஆயிரக்கணக்கான மக்கள் தங்களது சொந்த வாகனங்களில் சென்னையில் இருந்து தங்களுக்கு சொந்த ஊர்களுக்கு பயணம் செய்தனர். இந்த நிலையில் தைப்பொங்கல் கொண்டாட்டங்கள் முடிவடைந்ததைத் தொடர்ந்து, லட்சக்கணக்கான மக்கள் தங்கள் சொந்த ஊர்களிலிருந்து சென்னைக்கு திரும்பத் தொடங்கியுள்ளனர். நேற்று காணும் பொங்கல் முடிந்து, இன்று மதியம் முதலே சென்னை நோக்கி பயணிகள் கூட்டம் அதிகரித்துள்ளது. இதனால், சாலைகள், ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள் ஆகியவற்றில் கடும் நெரிசல் ஏற்பட்டுள்ளது.

கார், வேன் உள்ளிட்ட வாகனங்களில் மக்கள் சென்னைக்கு திரும்பிய வண்ணம் உள்ளனர். அனைத்து வாகனங்களும் ஒரே நேரத்தில் உளுந்தூர்பேட்டை சுங்கச்சாவடிக்கு வந்த போது போக்குவரத்து நெரிசல் காரணமாக நீண்ட வரிசையில் அணிவகுத்து ஊர்ந்து செல்லும் நிலை ஏற்பட்டது. போக்குவரத்து நெரிசலை தவிர்க்க டோல்கேட் நிர்வாகத்தின் சார்பில் கூடுதலாக இரண்டு கவுன்டர்கள் திறக்கப்பட்டு வாகனங்கள் அனைத்தும் அனுப்பி வைக்கப்பட்டன. போக்குவரத்து நெரிசலை தவிர்க்க போக்குவரத்து போலீசார் மாற்று ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

அண்டை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் இன்று பிற்பகலில் இருந்தே தங்கள் சொந்த வாகனங்கள் மற்றும் அரசுப் பேருந்து மற்றும் தனியார் பேருந்துகளின் மூலம் சென்னை நோக்கி அதிக எண்ணிக்கையில் வரத்தொடங்கினார். இதன் காரணமாக ஜிஎஸ்டி சாலையில் வண்டலூர், பெருங்களத்தூர், தாம்பரம், குரோம்பேட்டை ஆகிய பகுதிகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பல இடங்களில் நீண்ட தொலைவுக்கு வாகனங்கள் அணிவகுத்து நின்றன. இதனால் வாகன ஓட்டிகள் கடும் அவதிக்குள்ளாகினர்.

## கோவளம் நன்னீர் தேக்க திட்டத்தை உடனடியாக கைவிட வேண்டும்" சீமான்

சென்னை, ஜன.19-

கோவளம் நன்னீர்த் தேக்கத் திட்டத்தின் தொலைநோக்கு சிக்கல்களையும், அப்பகுதி மீனவ மக்களின் வாழ்வாதாரத்தினையும் கருத்தில் கொண்டு இத்திட்டத்தை தமிழ்நாடு அரசு உடனடியாகக் கைவிட வேண்டும் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையை நிறைவேற்றவும், வெள்ள பாதிப்புகளைக் குறைக்கவும் எனும் காரணங்களுக்காக என்று முன்மொழியப்பட்டு, செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் மற்றும் திருக்கழுக்குன்றம் தாலுகாக்களில் கிழக்கு கடற்கரை சாலை (ECR) மற்றும் பழைய மகாபலிபுரம் சாலை (OMR) ஆகியவற்றுக்கு இடையே உள்ள கோவளம் துணை வடிநிலத்தில் ஒரு புதிய நன்னீர்த் தேக்கம் அமைக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

471 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும் இந்தத் திட்டம், இப்பகுதியில் உள்ள 4375 ஏக்கர் பரப்பளவிலான உப்பங்கழி மற்றும் தாழ்வான நிலப்பகுதியைச் சுற்றி 30.6 கிலோமீட்டர் நீளத்திற்கு மண் கரைகளை அமைப்பதன் மூலம் உருவாக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான கடற்கரை மண்டல மேலாண்மை அனுமதி கடந்த டிசம்பர் 3ம் தேதி (03122025) வழங்கப்பட்டது. நன்னீர்த் தேக்கத் திட்டங்கள் உறுதியாக முன்னெடுக்கப்பட வேண்டியதும் பூமித்தாயின் நலனுக்கு இன்றியமையாததும் ஆகும். இருப்பினும் மேற்குறிப்பிட்ட இடத்தில் முன்மொழியப்பட்டுள்ள திட்டத்தின் பின்விளைவுகளை அரசு ஆராய்ந்திட வேண்டியது அவசியமாகும். இத்திட்டம் அந்தப் பகுதியின் சூழலியல் கட்டமைப்பையும், 16க்கும் மேற்பட்ட மீனவக் கிராமங்களின் வாழ்வாதாரத்தையும் வேரறுக்கும் ஒரு திட்டமாகும்.

கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை (CRZ Notification 2019, Annexure-IV) படி, மீன்பிடி இடங்கள் (பாடு) தெளிவாக வரைபடத்தில் குறிக்கப்பட வேண்டும். ஆனால், இத்திட்டத்திற்கான அனுமதியில் மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி இடங்கள் "வெற்று நிலம்" (Vacant Land) எனத் தவறாகக் காட்டப்பட்டுள்ளது. உப்பங்கழிகளில் காலம் காலமாக மீன்பிடித்து வரும் மீனவர்கள் மற்றும் பழங்குடி இருளர் மக்களின் வாழ்வாதார உரிமையை இத்திட்டம் பறிக்கிறது. மேலும் நூற்றாண்டு பழமை வாய்ந்த பக்கிங்காம் கால்வாயின் போக்கை மாற்றுவது மழைக்காலங்களில் நீரோட்டத்தைத் தடுத்து, பெரும் வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தும் ஆபத்துள்ளது. நெடுங்கால சீரழிவுகளில், கடலோடு கால்வாய் கொண்டுள்ள இயற்கை தொடர்பைத் துண்டிப்பது, கடல்சார் சூழலியல் சமநிலையைச் சீர்குலைக்கும்.

உப்பங்கழிகள் என்பது கடல் நீர் புகுந்து செல்லும் உவர்நீர் பகுதிகள். இங்கு நன்னீரைத் தேக்குவதால், இயற்கையான உப்புத்தன்மை மாறும். அதன் விளைவாக இறால் மற்றும் மீன்களின் இனப்பெருக்கச் சுழற்சியை அழித்துவிடும். இப்பகுதி பல புலம்பெயர் பறவைகளுக்கும், அரிதான கடல்வாழ் உயிரினங்களுக்கும் வாழ்விடமாகும். நன்னீர்த் தேக்கம் உருவானால், இந்த ஒட்டுமொத்த உயிரினச் சூழலும் அழிந்துவிடும்.

இதே பகுதியில் தமிழக அரசின் நெம்மேலி கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் செயல்பட்டு வருகிறது. ஒரே இடத்தில் கடல்நீரைத் சுத்திகரிக்கும் தொழில்நுட்பத்தையும் வைத்துக்கொண்டு, இயற்கை உப்பங்கழிகளை அழிக்கும் வகையிலும் திட்டம் முன்மொழிவது எதற்கு என்கிற கேள்வி எழுகிறது. மறுபுறம், பாதிக்கப்பட்ட மக்களுடன் ஆலோசனைக் கூட்டங்கள் நடக்கும் முன்பே திட்டப்பணிகளுக்கான ஏற்பாடுகள் நடப்பது மக்களாட்சிக் கோட்பாட்டிற்கு எதிரான செயலாகும். சென்னையின் தண்ணீர் தேவையையும் வெள்ளநீர் வடிகால் முறையையும் சீரமைக்கவேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்காது. செம்பரம்பாக்கம், புழல், பூண்டி மற்றும் சோழவரம் ஆகிய ஏரிகளை நவீன தொழில்நுட்பத்துடன் தூர்வாருதல், பயன்பாட்டில் இருக்கும் நன்னீர்த் தேக்கங்களில் கழிவு நீர் மற்றும் குப்பை கலக்காது வழிவகுத்தல் மற்றும் கால்வாய்களைப் பராமரித்தாலே அதிக அளவில் நன்னீரைச் சேமிக்க முடியும். உப்பங்கழிகளை அழிக்காமல், அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள சிறு ஏரிகளை ஆழப்படுத்துவதன் மூலம் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தி, உப்பு நீர் ஊடுருவலைத் தடுக்கலாம். வளர்ச்சி என்பது நிலத்தையும், வளத்தையும் மேலும் அந்த நிலத்தைச் சார்ந்து வாழும் மனிதர்களையும் உள்ளடக்கியது. 16 கிராம மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பலிகொடுத்து உருவாக்கப்படும் இந்த நன்னீர்த் தேக்கம், சூழலியல் மீட்டுருவாக்கத்திற்குப் பதிலாக அழிவுக்கே இட்டுச்செல்லும். எனவே, அரசு உடனடியாக இத்திட்டத்தை கைவிட்டு மாற்று வழிகளில் கவனம் செலுத்த வேண்டும் என்று நாம் தமிழர் கட்சியின் சார்பாக வலியுறுத்துகின்றேன்' எனத் தெரிவித்துள்ளார்.



■ சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வடக்கு வண்ணாரவயலில் புதிய சிந்தனை துளிகள் சார்பில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.நிகழ்ச்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் தலைமை வகித்தார்.நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப.மதியரசன், துணை வட்டாரவளர்ச்சி அலுவலர் இராதாக்கிருஷ்ணன், புதிய சிந்தனை துளிகள் சரவணன், மகளிரணி ராஜேஸ்வரி, மாவட்ட விவசாய அணி காளிமுத்து, முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் தமிழரசன் மற்றும் திரளானோர் கலந்துகொண்டனர்.




# சிவகங்கை பாவை பவுண்டேஷன் சார்பில் பொங்கல் திருவிழா

சிவகங்கை, ஜன.19-

மாவட்டம், தேவகோட்டை ராம் நகர் பகுதியில் பாவை பவுண்டேஷன் சார்பில் பொங்கல் திருவிழாவை முன்னிட்டு சமத்துவ பொங்கல் கொண்டாட்ட விழா சிறப்பாக நடைபெற்றது.விழாவில் பாரம்பரிய முறையில் பொங்கல் வைக்கப்பட்டு, சிறுவர், சிறுமிகள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்களுக்காக பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

பாவை பவுண்டேஷன் ஒருங்கிணைப்பாளர் ஸ்டேன்லி ராபின், இளைஞர் மன்றம் பிரிட்டோ மற்றும் கிராம மக்கள் திரளாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

மேலும், பாவை பவுண்டேஷன் கிராமங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், திறன் பயிற்சிகள் உள்ளிட்ட பல்வேறு சமூக சேவைகளை தொடர்ந்து செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

# மானாமதுரையில் பாரதியார் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது



மானாமதுரை, ஜன.19-

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் மானாமதுரை கிளையின் சார்பாக மக்கள் கவி பாரதியார் பிறந்தநாள் விழா மற்றும் அரசியல் சாசன பாதுகாப்பு கருத்தரங்கம் கிளைத்தலைவர் தேவதாஸ் தலைமையில் நடைபெற்றது. தமுஎகச மாவட்டக்குழு உறுப்பினர்கள் ஓவிய ஆசிரியர் செல்வம், நந்தினி, செயற்குழு உறுப்பினர்கள் பொன்னையா, குருசெல்வம், சுந்தரபாண்டியன் பாரதிசத்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிளைச்செயலாளர் ரசீந்திரகுமார் வரவேற்புரையாற்றினார். மக்கள் கவி பாரதியார் குறித்து ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் திருமாவளவன், அரசியல் சாசன பாதுகாப்பு குறித்து மாவட்டச்செயலாளர் முனைவர் அன்பரசன் ஆகியோர் கருத்துரையாற்றினார்கள். போட்டிகளில் பங்குபெற்ற குழந்தைகளுக்கு பாராட்டி பரிசுகள் வழங்கி நகர்மன்ற தலைவர் மாரியப்பன்கென்னடி, திமுகநகர்செயலாளர் பொன்னுச்சாமி,கிராம நிர்வாக அலுவலர் மீனாபிராபாகரன், மாநிலக்குழு உறுப்பினர் ஜீவசிந்தன், மாவட்டத்தலைவர் சிபூ,மாவட்டப்பொருளாளர் பாலமுருகன் துணைச்செயலாளர் மாணிக்கவள்ளி, சமூக ஆர்வலர் சரவணன்கருப்பையா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். கிளைப்பொருளாளர் பாரதிதங்கராஜ் நன்றியுறையாற்றினார். இவ்நிகழ்வில் ஆசிரியர் முத்துராமலிங்கம், சோமசுந்தரபாரதி, முனைவர் அழகுமுருகன், சரவணன் அலைகள்நாரயணன்துரை. தங்கவேல், அறிவொளிபாண்டி ஆசிரியர் வெங்கடேஷ் கமல்ராஜன், பஞ்சுராஜ், ஆதரவு அறக்கட்டளை ஆசிரியர்கள் உட்பட பள்ளி மாணவியர்கள், குழந்தைகளின் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.



# காவேரிப்பட்டிணத்தில் ஒன்றிய ஓபிஎஸ் அணி சார்பில் எம்ஜிஆர் பிறந்தநாள் விழா

காவேரிப்பட்டணம், ஜன.19-

காவேரிப்பட்டிணத்தில் ஓபிஎஸ் அணி சார்பில் எம்ஜிஆர் பிறந்தநாள் விழா

காவேரிப்பட்டணம் கொசமேடு பகுதியில் உள்ள எம்ஜிஆர் சிலைக்கு ஒன்றிய செயலாளர் கேபிள் சின்னசாமி தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டு, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் மாநில இளைஞரணி செயலாளர் வெற்றிவேல்,பொதுக்குழு உறுப்பினர் லோகாயிராமன், தங்கராஜ் ,ராமசாமி, பழக்கடை ஜெயராமன், சுந்தரம், எம்ஜிஆர் மன்றம் செல்வம், அரவிந்தன், பவுன்ராஜ், தினேஷ், ஒன்றிய இணைச் செயலாளர் சுந்தரம் , உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தேவகோட்டைஆனந்தா கல்லூரியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு கூட்டம்

தேவகோட்டை, ஜன19-

சிவகங்கை மாவட்டம்தேவகோட்டை ஆனந்த கல்லூரியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு கூட்டம் கல்லூரியின் செயலர் அருட்தந்தை முனைவர் செபாஸ்டியன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு முதல்வர் அருட்தந்தை ஜார்ஜ் பெர்னாண்டஸ் வரவேற்புரை வழங்கினார். சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட கல்லூரியின் கல்லூரியின் முன்னாள் முதல்வர் அருட்தந்தை முனைவர் ஜான் வசந்தகுமார் பேசுகையில், இன்று உங்கள் முகங்களைப் பார்க்கும்போது, எனக்குப் பழைய வகுப்பறைகளும், வராண்டாக்களும் தான் நினைவுக்கு வருகின்றன. நீங்கள் இந்த வளாகத்திற்குள் நுழையும்போது சிறு விதைகளாக வந்தீர்கள். இன்று உலகின் பல்வேறு பகுதிகளில் விழுதுகளாகப் படர்ந்து



நிற்பதைக் காணும்போது பெருமையாக இருக்கிறது. கல்வி என்பது வெறும் மதிப்பெண்கள் சார்ந்தது மட்டுமல்ல; அது ஒரு மனிதனை உருவாக்குவது. இன்று நீங்கள் வெவ்வேறு துறைகளில் சாதித்து வருகிறீர்கள். உங்களில் பலர் தொழிலதிபர்களாகவும், அதிகாரிகளாகவும், சமூக சேவகர்களாகவும் இருப்பதைக் காணும்போது, இந்தக் கல்லூரி தனது லட்சியத்தில் வெற்றி பெற்றுவிட்டதாக உணர்கிறேன். இருந்த போதிலும் அரசின் உயர் பதவிகளில் நீங்கள் வரவேண்டும், வளர வேண்டும் என்று உரையாற்றினார். மற்றொரு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கல்லூரியின் முன்னாள் செயலாளர் ஆசீர்வாதம் பேசுகையில்,

ஒரு கல்வி நிறுவனத்தின் முதுகெலும்பு அதன் முன்னாள் மாணவர்கள் தான்.

ஆரம்பக் காலத்தில் போதிய நிதி வசதி இல்லாதபோது கூட, தரமான கல்வியைக் கொடுக்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருந்தோம். இன்று நவீன ஆய்வகங்கள், டிஜிட்டல் வகுப்பறைகள் என அனைத்து இருக்கிறது. மாணாக்கர்கள் நீங்கள் இன்று அடைந்துள்ள இந்த வளர்ச்சி உங்கள் உழைப்பால் வந்தது. அதே சமயம், உங்களுக்குப் பின்னால் வரும் தற்போதைய மாணவர்களுக்கு நீங்கள் ஒரு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கல்லூரி உங்களை உருவாக்கியது, நீங்கள் இந்தக் கல்லூரியின் எதிர்காலத்தைத் தூக்கிப் பிடிக்க வேண்டும் என்று பழைய நினைவுகளைப் பகிர்ந்து உரை நிகழ்த்தினர்.

பின்பு முன்னாள் மாணவர்கள் பழைய நினைவுகள் மற்றும் வாழ்வின் வளர்ச்சிகளை பகிர்ந்து கொண்டனர். கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது இறுதியாக முன்னாள் மாணவர்களின் இயக்குனர் வணிக கணினி பயன்பாட்டுவியல் துறைத்தலைவர் பேராசிரியர் ஆனந்த் குமார் நன்றியுரை கூறினார். இந்நிகழ்வில் முன்னாள் மாணவர்கள், துணை முதல்வர்கள், இருபால் பேராசிரியர்கள், அலுவலகர்கள் கலந்து கொண்டனர்.




# பொங்கலை முன்னிட்டு மணப்பாறை அருகே ஜல்லிக்கட்டு

மணப்பாறை ஜன 19-

திருச்சி:மணப்பாறை அருகே உள்ள பொத்த மேட்டுப்பட்டியில் அந்தோணியார் பொங்கல் விழாவை முன்னிட்டு ஜல்லிக்கட்டு போட்டி புனித வியாகுலமாதா திடலில் ஜல்லிக்கட்டு போட்டியை ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டாட்சியர் சீனிவாசன் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள் அதனைத் தொடர்ந்து ஜல்லிக்கட்டு விழாவில்

உள்ளூர் காளைகளை அழைத்து வரப்பட்டுஅவிழ்த்து விடப்பட்டது,திருச்சி திண்டுக்கல் மதுரை சிவகங்கை கரூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்திருந்தகாளைகள் வாடிவாசல் இருந்து அவிழ்த்து விடப்பட்டது அப்போது சில காளைகள் களத்தில் தன்னை பிடிக்க வந்த வீரர்களை நெருங்க கூட விடாமல் விரட்டி அடிக்கும்போது ஆரவாரத்தில் அதிர்ந்தது, இதேபோல் அடங்க மறுத்த காளைகளின் திமிலை பிடித்து வீரர்கள் அடக்கு வெற்றியின் பெற்றதும் வெற்றி பெற்ற காளைமற்றும் வீரர்களுக்கு சைக்கிள், பீரோ ,கட்டில்,சில்வர் பாத்திரங்கள்,குக்கர்,அண்டா ,உள்ளிட்ட பல்வேறு பரிசாக வழங்கப்பட்டது போட்டியில் பங்கேற்கும் அனைத்து காளைகளுக்கும் 5கிலோ அரிசி வழங்கப்பட்டது, ஜல்லிக்கட்டு விழாவில் காவல் கண்காணிப்பாளர் செல்வ நாகரத்தினம் உத்தரவின்படி கிபீஷிறி மதியழகன் தலைமையில் 220காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்,மருத்துவ பணியா ளர்கள் ,பொதுப்பணித்துறை அலுவலர்கள்,தீயணைப்புத் துறையினர், வருவாய்த்துறை அலுவலர்கள் ஆகியோர் பணியில் ஈடுபட்டனர் இதில் பங்குபெற்ற 625 காளை களும், 256 மாடுப்பிடி வீரர்களும் கலந்து கொண்டனர். இதில் மாட்டின் உரிமையாளர்கள் மற்றும் வீரர்கள் 21 பேருக்கு லேசான காயம் மட்டும் மேல் சிகிச்சைக்காக மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.



■ திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம், பருத்தியூர் கிராமத்தை சேர்ந்தவர் நாட்டுத்துரை வயது (35). இவர் விபத்தில் உயிரிழந்தார். இவரது உறுப்புகள் தானமாக கொடுக்கப்பட்டது. அரசு மரியாதையுடன் இறுதிச்சடங்கு செய்யும் விதமாக பருத்தியூர் கிராமத்தில் உள்ள மயானத்தில் நடைபெற்ற இறுதிச்சடங்கில் அவரது உடலுக்கு பழனி வருவாய் கோட்டாட்சியர் கண்ணன் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.




■ திண்டுக்கல் ஆயுதப்படை வளாகத்தில் நிண்டுக்க மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலாத்துறை சார்பில் நடைபெற்ற "கலையுடன் காணும் பொங்கல்" திருவிழாவை மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், இ.ஆ.ப, அவர்கள்(17.01.2026) தொடங்கி வைத்து பங்கேற்றார்.அருகில் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம் அவர்கள், மாவட்ட சுற்றுலா அலுவலர் ஹ.கோவிந்தராஜ் உட்பட பலர் உள்ளனர்.

# சிவகங்கை: பொங்கல் விடுமுறையில் அதிரடி 47 பிடிவாரண்டுகள் நிறைவேற்றம் : 5 முக்கிய குற்றவாளிகள் கைது!

சிவகங்கை ஜன 19-

சிவகங்கை மாவட்டத்தில் நிலுவையில் உள்ள நீதிமன்ற பிடிவாரணைகளை (Non-Bailable Warrants) நிறைவேற்றும் பொருட்டு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில் அமைக்கப்பட்ட தனிப்படையினர் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். இதில் கடந்த மூன்று நாட்களில் மட்டும் மொத்தம் 47 பிடிவாரணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.முக்கிய குற்றவாளிகள்



Arumugam@ Kattupoochi,32/26



Aasaimuthu, 25/26



Piranmalai32/26



Prakashraj@ Loosu Prakash27/25



Pandimurugan33/26

கைதுகுறிப்பாக, நீண்ட நாட்களாக தலைமறைவாக இருந்த 5 முக்கிய சரித்திரப் பதிவேடு குற்றவாளிகளை (History Sheeters) தனிப்படையினர் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களின் விவரங்கள்:ஆறுமுகம் (எ) காட்டுப்பூச்சி (32) நாட்டரசன்கோட்டை, சிவகங்கை.ஆசைமுத்து (25) படமாத்தூர். பிரான்மலை (32) காரைக்குடி.பிரகாஷ்ராஜ் (எ) லூசு பிரகாஷ் (27) திருப்புவனம் பாண்டிமுருகன் (33) தேவகோட்டை. காவல்துறை எச்சரிக்கைபொங்கல் விடுமுறை காலத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட இந்தச் சிறப்பு வேட்டையில், பல்வேறு குற்ற வழக்குகளில் தொடர்புடைய இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு உட்படு த்தப்பட்டுள் ளனர்.மேலும், நீதிமன்ற பிடிவாரணைகள் நிலுவையில் உள்ள மற்ற குற்றவாளிகளும் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என சிவகங்கை மாவட்ட காவல்துறை எச்சரித்துள்ளது.

# பெருமாள் கோயில்களில் நவகிரக சன்னதி இல்லை ஏன்?...பலருக்குத் தெரியாத ஆன்மீக ரகசியம்



ஜோதிட ரீதியாக ஒருவரின் வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்வுகளை நவகிரகங்களின் இயக்கங்கள் தான் நிர்ணயிக்கின்றன என சொல்லப்படுகிறது. இதனால் தான் நவகிரகங்களின் அருளை பெறவும், நவகிரகங்களால் ஏற்படும் பாதிப்புக்களில் இருந்து விடுபடவும் அனைத்து கோவில்களிலும் நவகிரக சன்னதிகள் உள்ளன. ஆனால் பெருமாள் கோவில்களில் மட்டும் நவகிரகங்களுக்கு என்று தனிச்சன்னதி எதுவும் இல்லை. இதற்கு என்ன காரணம் என தெரிந்து கொள்ளலாம்.

அனைத்து தெய்வங்களின் கோயில்களிலும் நவகிரக சன்னதி இருக்கும் போது பெருமாள் கோயில்களில் மட்டும் ஏன் இல்லை? என்ற கேள்வி பலரின் மனதிலும் இருக்கும். அந்தக் கேள்விக்கான பதில்,வைணவத்தின் ஆழமான தத்துவத்தில் மறைந்திருக்கிறது. பெருமாள், வாமன அவதாரத்தில் மூன்று அடிகளில் பூலோகம், வானுலகம், பாதாள உலகம் மட்டுமல்ல அண்ட சராசரங்களையும் அளந்தார். அப்படியானால், அந்த அண்டங்களில் இருக்கும் நவகிரகங்களும், லோகங்களும், காலமும், கர்மமும் எல்லாம் பெருமாளுக்குள் அடங்கியவையே.அதனால் தான் வைணவ மரபில்,"பெருமாளை வழிபட்டாலே நவகிரகங்களை வழிபட்ட பலன் கிடைக்கும்" என்று தொன்று தொட்டு நம்பப்படுகிறது. அப்படி இருக்க, தனியாக ஒரு நவகிரக சன்னதி தேவையா? இல்லை என்பதே வைணவ சித்தாந்தம்.

வைணவர்களைப் பொறுத்த வரை, உயர்ந்தவன் ஒருவன் மட்டுமே. அவன் நாராயணனே. அதனால் தான், பெருமாளின் அவதாரங்களே நவகிரக சக்திகளாக விளங்குகின்றன.

1. ராமாவதாரம் சூரியன்
2. கிருஷ்ணாவதாரம் சந்திரன்
3. நரசிம்மாவதாரம் செவ்வாய்
4. கல்கி அவதாரம் புதன்
5. வாமனாவதாரம் குரு
6. பரசுராமாவதாரம் சுக்ரன்
7. கூர்மாவதாரம் சனி
8. வராக அவதாரம் ராகு
9. மச்சாவதாரம் கேது

கிரகங்கள் பெருமாளை ஆட்சி செய்யவில்லை. பெருமாளே கிரகங்களை ஆட்சி செய்கிறார்.

நவதிருப்பதிகளும் நவகிரகத் தலங்களும் :

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள நவதிருப்பதிகள், நவகிரக தலங்களாகவே போற்றப்படுகின்றன:

1. ஸ்ரீவைகுண்டம் சூரியன்
2. வரகுணமங்கை சந்திரன்
3. திருக்கோளூர் செவ்வாய்
4. திருப்புளியங்குடி புதன்
5. ஆழ்வார்திருநகரி குரு
6. தென்திருப்பேரை சுக்ரன்
7. பெருங்குளம் சனி
8. இரட்டை திருப்பதி (தேவர்பிரான்) ஷ ராகு
9. இரட்டை திருப்பதி (அரவிந்த லோசனர்) ஷ கேது

இதன் மூலம், நவகிரகங்களும் நாராயணனின் அருளுக்குள் தான் என்பது தெளிவாகிறது. இது பெருமாளின் பரிபூரணத்தை குறிப்பதாகும். இதனால் பெருமாள் கோவிலுக்கு சென்று வழிபட்டாலும், பெருமாளை வேண்டி விரதம் இருந்து வழிபட்டாலும் பாவங்கள் அனைத்தும் நீங்கி, மோட்சம் கிடைக்கும். புண்ணியங்கள் சேரும் என்பது நம்பிக்கை.

சுப்ரபாதத்தில் மறைந்துள்ள உண்மை :

திருப்பதி பெருமாளின் சுப்ரபாதத்தில் வரும் இந்தச் செய்யுள்:

"சூர்யேந்து பௌம புத வாக்பதி காவ்ய சௌரி
ச்வர்பானு கேது திவிஷத் பரிஷத் ப்ரதானா
த்வத் தாச தாச சரமாவதி தாச தாசா
ஸ்ரீ வேங்கடாசலபதே தவ சுப்ரபாதம்"

பொருள்:

"நவகிரகங்கள் அனைத்தும்,
பெருமாளின் தரிசனத்தையும்
அருளையும் பெற
காத்திருக்கும் அடியார்களே".

மனதில் பக்தியே இல்லா விட்டாலும் ஒருவர் தன்னுடைய வாழ்நாளில் ஒரு முறையாவது "நாராயணா, ராமா" என்ற திருநாமத்தை சொன்னாலே அவரது பல பிறவிகளில் செய்த பாவங்கள் நீங்கி, வைகுண்ட பதவி கிடைக்கும் என புராணங்கள் சொல்கின்றன.

# சனி தோஷம் நீங்க சனிக்கிழமைகளில் இதை மட்டும் மறந்தும் செய்துடாதீங்க



தோஷங்களில் மிக கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய தோஷங்களில் ஒன்று தான் சனி தோஷம். சனி பகவானின் கோபத்திற்கு ஆளாகும் போது நமக்கு சனி தோஷம் ஏற்படுகிறது. இவற்றில் இருந்து விடுபடவும், சனி பகவானின் அருளை பெறவும் அவருக்குரிய சனிக்கிழமையில் என்ன செய்யலாம், என்ன செய்யக் கூடாது என்பது பற்றியும் தெரிந்து கொள்ளலாம்.

இந்து தர்மத்தில் சனி பகவான் 'நீதிமான்' என்று அழைக்கப்படுகிறார். ஒருவருடைய கர்மாவிற்கு (செயல்களுக்கு) ஏற்ப பலன்களை வழங்குபவர் அவர். ஜாதகத்தில் சனி தோஷம் அல்லது ஏழரை சனி பாதிப்பு உள்ளவர்கள் சனிக்கிழமைகளில் சில குறிப்பிட்ட பொருட்களை தானம் செய்வது நல்ல பலனைத் தரும் என்று நம்பப்படுகிறது. இது சனி பகவானின் தீய பலன்களை குறைத்து, சனி பகவானின் அருளை பெற உதவும். சனிக்கிழமை சனி பகவானின் அருளையும், கருணையையும் பெறுவதற்கான நாளாகும். அதே சமயம், தெரியாமல் செய்யும் சில தானங்கள் பாதிப்பை ஏற்படுத்தலாம்.சனிக்கிழமைகளில் தெரியாமல் செய்யும் சில தவறுகள் சனி பகவானின் கோபத்தை பெற செய்து விடும். இதனால் பலவிதமான துன்பங்கள், தடைகள், பிரச்சனைகளை சந்திக்க வேண்டி வந்து விடும்.

சனிக்கிழமைகளில் தானம் செய்ய வேண்டியவை:

1. கருப்பு எள்: சனி பகவானுக்கு மிகவும் பிடித்தமான பொருளாகவும், அவருக்குரிய தானியமாகவும் கருதப்படுவது கருப்பு எள். சனிக்கிழமைகளில் ஏழைகளுக்கு கருப்பு எள் தானம் செய்வது சனி தோஷத்தின் தீவிரத்தைக் குறைக்கும்.

2. கடுகு எண்ணெய்: சனிக்கிழமையன்று ஒரு பாத்திரத்தில் கடுகு எண்ணெயை ஊற்றி, அதில் உங்கள் முகத்தைப் பார்த்து (சாயா தானம்), பிறகு அந்த எண்ணெயை தானம் செய்வது தோஷங்களை நீக்கும்.

3. கருப்பு நிற ஆடைகள்: கருப்பு நிறம் சனியின் நிறமாகக் கருதப்படுகிறது. எனவே, வசதியற்றவர்களுக்கு கருப்பு நிற போர்வை அல்லது ஆடைகளைத் தானம் செய்வது புண்ணியத்தைத் தரும்.

4. இரும்புப் பொருட்கள்: இரும்பு சனி பகவானுடன் தொடர்புடைய உலோகமாகும். இரும்பாலான பாத்திரங்கள் அல்லது பொருட்களைத் தானம் செய்வது தடைகளை நீக்க உதவும்.

5. கருப்பு உளுந்து: கருப்பு உளுந்து தானம் செய்வது பொருளாதார ரீதியான பிரச்சனைகளில் இருந்து விடுபட உதவும் என்று நம்பப்படுகிறது.

6. காலணிகள்: ஏழைகளுக்கு செருப்புகளை தானம் செய்வது ஜாதகத்தில் உள்ள சனி தொடர்பான சிக்கல்களைத் தீர்க்கும்.

சனிக்கிழமைகளில் தவிர்க்க வேண்டியவை (வாங்கக் கூடாதவை):

1. உப்பு: சனிக்கிழமையன்று உப்பு வாங்குவது கடனை அதிகரிக்கும் என்றும் குடும்பத்தில் அமைதியின்மையை ஏற்படுத்தும் என்றும் நம்பப்படுகிறது.

2. கத்தரிக்கோல் அல்லது கூர்மையான பொருட்கள்: சனிக்கிழமைகளில் கத்தரிக்கோல் அல்லது கத்தி போன்ற கூர்மையான பொருட்களை வாங்குவது உறவுகளில் விரிசலை ஏற்படுத்தும் என்று சொல்லப்படுகிறது.

3. எண்ணெய்: சனிக்கிழமையன்று எண்ணெயைத் தானம் செய்யலாமே தவிர, வீட்டிற்குப் புதிய எண்ணெய் வாங்கக்கூடாது.

4. நிலக்கரி அல்லது இரும்பு: சனிக்கிழமையன்று இரும்புப் பொருட்களை வீட்டிற்கு வாங்குவது அசுபமாகக் கருதப்படுகிறது (தானம் செய்யலாம், ஆனால் வாங்கக்கூடாது).

சனிக்கிழமைகளில் செய்யும் தானம் தன்னலமற்றதாக இருக்க வேண்டும். தேவையுள்ளவர்களுக்கு உண்மையான மனதுடன் உதவி செய்யும் போது, சனி பகவான் கனிவான பார்வையை வழங்குவார் என்பது ஐதீகம்.

# பந்துவீச்சு வியூகங்களை மாற்றி அமைக்குமா இந்திய அணி?

நியூஸிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் வதோதராவில் நடைபெற்ற முதல் போட்டியில் இந்திய அணி 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது. தொடர்ந்து ராஜ்கோட்டில் நடைபெற்ற 2வது ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று பதிலடி கொடுத்தது.

இதனால் தொடர் 11 என சமநிலையில் உள்ளது. இந்நிலையில் ஒருநாள் போட்டித் தொடரை வெல்வது யார்? என்பதை தீர்மானிக்கும் வகையில் அமைந்துள்ள கடைசி மற்றும் 3வது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இந்தூரில் உள்ள ஹோல்கர் மைதானத்தில் நாளை (18ம் தேதி) நடைபெறுகிறது. இந்த போட்டியில் பங்கேற்பதற்காக நேற்று முன்தினம் இரு அணி வீரர்களும் இந்தூர் வந்தடைந்தன. இதைத் தொடர்ந்து நியூஸிலாந்து அணி வீரர்கள் நேற்று ஹோல்கர் மைதானத்தில் தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர்.

அதேவேளையில் இந்திய வீரர்களுக்கு கட்டாய பயிற்சியாக அமையவில்லை. இதனால் பெரும்பாலான வீரர்கள் பயிற்சியில் கலந்துகொள்ளவில்லை. இருப்பினும் இன்று நடைபெறும் பயிற்சியில் இந்திய அணி வீரர்கள் அனைவரும் பங்கேற்க உள்ளனர். கடைசி ஒருநாள் போட்டியில் இந்திய அணி தனது பந்துவீச்சு வியூகங்களை மாற்றி அமைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

ஏனெனில் 2வது ஒருநாள் போட்டியில் இந்திய அணியின் சுழற்பந்து வீச்சு எந்த ஒரு கட்டத்திலும் நியூஸிலாந்து பேட்ஸ்மேன்களுக்கு அழுத்தம் கொடுக்கவில்லை. குல்தீப் யாதவ், ரவீந்திர ஜடேஜா ஆகியோரது சுழலில் நியூஸிலாந்து பேட்ஸ்மேன்கள் ஸ்வீப் ஷாட் விளையாடி எளிதாக ரன்கள் சேர்த்தனர். அதிலும் டேரில் மிட்செல், இந்திய சுழற்பந்துவீச்சை நன்கு பதம்பார்த்தார். கால் நகர்வுகளை அருமையாக பயன்படுத்திய அவர், இந்திய அணியின் பந்துவீச்சு திட்டங்களை சீர்குலைத்தார்.

இதனால் ஒரு குழுவாக இந்தியாவின் சுழற்பந்து வீச்சாளர்களால் நியூஸிலாந்து அணியின் பேட்ஸ்மேன்களுக்கு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுக்க முடியாமல் போனது. அந்த ஆட்டத்தில் குல்தீப் யாதவ் 10 ஓவர்களை வீசி 82 ரன்களை தாரை வார்த்து இருந்தார். அதேவேளையில் முதல் போட்டியில் குல்தீப் யாதவ் 9 ஓவர்களில் 52 ரன்களை விட்டுக்கொடுத்திருந்தார். இது ஒருபுறம் இருக்க கடைசி போட்டி நடைபெறும் இந்தூர் ஹோல்கர் மைதானத்தின் எல்லைக்கோடுகள் சிறியவை. மேலும் ஆடுகளம் பேட்டிங்கிற்கு சாதகமாக இருக்கும். இதனால் இந்திய அணி பந்துவீச்சு திட்டங்களில் சில மாறுதல்களை மேற்கொள்ளக்கூடும். பிரசித் கிருஷ்ணாவை நீக்கிவிட்டு அர்ஷ்தீப் சிங் சேர்க்கப்பட அதிக வாய்ப்புகள் உள்ளன.

பிரசித் கிருஷ்ணா முதல் 2 ஆட்டங்களிலும் மோசமாக செயல்படவில்லை. எனினும் அவரது அவர், பேக் ஆஃப் தி லெந்த்தில் பந்துகளை வீசக்கூடியவர். இந்த வகையிலான பந்துவீச்சு சிறிய அளவிலான ஆடுகளங்களில் கைகொடுக்காது. இதனால் ஸ்விங் மற்றும் ஃபுல்லர் லென்ந்த்களை பயன்படுத்தும் அர்ஷ்தீப் சிங் இடம் பெறக்கூடும்.

மேலும் குல்தீப் யாதவ் பிளாட்டாக வீசுவதிலும், ஸ்டெம்புகளை குறிவைத்து வீசுவதிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் இதுபோன்ற சிறிய ஆடுகளங்களில் பந்துகளை ஃபிளைட்டாக வீசினால் மைதானத்துக்கு வெளியே அடிக்க அதிக வாய்ப்

புகள் உள்ளன. பந்துகளின் நீளத்தை கட்டுப்படுத்துவதிலும் கவனம் செலுத்த வேண்டும். சுழற்பந்து வீச்சை பலப்படுத்தும் வகையில் நிதிஷ் குமார் ரெட்டிக்கு பதிலாக ஆயுஷ் பதோனி அறிமுக வீரராக களமிறக்கப்பட வாய்ப்புகள் உள்ளன.

# இந்தியா ஓபன் பாட்மிண்டன்: ஜோனாதன் கிறிஸ்டி, அன் சே யங் இறுதிப் போட்டிக்கு முன்னேற்றம்!




இந்தியா ஓபன் பாட்மிண்டன் தொடர் டெல்லியில் உள்ள இந்திராகாந்தி விளையாட்டரங்கில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு அரை இறுதியில் முன்னாள் உலக சாம்பியனான சிங்கப்பூரின் லோன் கீன் யூ, இந்தோனேஷியாவின் ஜோனாதன் கிறிஸ்டி எதிர்த்து விளையாடினார். இதில் ஜோனாதன் கிறிஸ்டி 21-18, 22-20 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரை இறுதி சுற்றில் உலகின் முதல் நிலை வீராங்கனையான தென் கொரியாவின் அன் சே யங், முன்னாள் சாம்பியனான தாய்லாந்தின் ரட்சனோக் இன்டானுடன் மோதினார். இதில் அன் சே யங் 21-11, 21-7 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இறுதிப் போட்டியில் அன் சே யங், சீனாவின் வாங் ஸி யியுடன் மோதுகிறார். வாங் ஸி யி அரை இறுதி சுற்றில் சகநாட்டைச் சேர்ந்த சென் யு ஃபெயியை 21-15, 23-21 என்ற செட் கணக்கில் தோற்கடித்தார்.

# பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் ஐபிஎல் போட்டிகளை நடத்த அனுமதி



ஐபிஎல் தொடரில் கடந்த ஆண்டு ராயல் சாலஞ்சர்ஸ் பெங்களூரு சாம்பியன் பட்டம் வென்றது. முதல் முறையாக அந்த அணி பட்டம் வென்றதை தொடர்ந்து ஜூன் 4ம் தேத பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் வெற்றி கொண்டாட்ட நிகழ்ச்சி நடைபெற்றது.

இதையொட்டி மைதானத்துக்கு வெளியே ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் இறந்தனர். இதைத் தொடர்ந்து சின்னசாமி மைதானத்தில் அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளையும் நடத்த கர்நாடக மாநில அரசு தடைவிதித்தது.

மேலும் மைதானத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு பணிகள் குறித்து ஆய்வு செய்ய சிறப்பு குழு ஒன்றையும் அரசு நியமித்தது. இந்த குழு மைதானத்தில் பல்வேறு கட்ட ஆய்வுகளை நடத்தியது. இதுஒருபுறம் இருக்க வெங்கடேஷ் பிரசாத் தலைமையிலான கர்நாடக கிரிக்கெட் சங்க நிர்வாகிகள் அரசு தரப்பு மற்றும் விசாரணைக்குழுவுடன் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி வந்தது.

இந்நிலையில் கர்நாடக அரசால் நியமிக்கப்பட்ட சிறப்புக்குழு பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் பாதுகாப்பு பணிகள் திருப்திகரமாக இருப்பதாக அரசுக்கு அறிக்கை அளித்துள்ளது. இதன் அடிப்படையில் உள்துறை அமைச்சகம் மைதானத்தில் மீண்டும் போட்டிகளை நடத்துவதற்கு கர்நாடக கிரிக்கெட் சங்கத்துக்கு அனுமதி அளித்துள்ளது.

கர்நாடக கிரிக்கெட் சங்க செய்தி தொடர்பாளரான வினய் மிருத்யுஞ்சயா கூறும் போது, "பெங்களூருவில் உள்ள புகழ்பெற்ற எம்.சின்னசாமி மைதானத்தில் சர்வதேச மற்றும் ஐபிஎல் போட்டிகளை நடத்த கர்நாடக மாநில கிரிக்கெட் சங்கத்துக்கு (கேஎஸ்சிஏ) கர்நாடக அரசின் உள்துறை அனுமதி வழங்கியுள்ளது. இதை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

அரசு மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் பரிந்துரைக்கப்பட்ட குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க இந்த அனுமதி வழங்கப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட அனைத்து நிபந்தனைகளையும் நிறைவேற்றுவதில் கர்நாடக கிரிக்கெட் சங்கம் உறுதியுடன் உள்ளது" என்றார்.

இதற்கிடையே ஆர்சிபி அணி இந்த சீசனுக்கான போட்டிகளை ராய்ப்பூர் மற்றும் புனேவில் நடத்துவதற்கான பணிகளை மேற்கொண்டது. தற்போது கர்நாடக அரசு சின்னசாமி மைதானத்தில் போட்டிகளை நடத்த அனுமதி வழங்கி உள்ளதால் ஆர்சிபி அணி உற்சாகம் அடைந்துள்ளது. மேலும் அந்த அணி 300 முதல் 350 ஏஐ தொழில்நுட்பத்துடன் இயங்கக்கூடிய கேமராக்களை மைதானத்தில் நிறுவ முன்வந்துள்ளது. இதற்காக ரூ.4.50 கோடியை செலவிட தயாராக இருப்பதாக ஆர்சிபி அணி, கர்நாடக கிரிக்கெட் சங்கத்திடம் தெரிவித்துள்ளது.



# புதிய படத்தில் கவினுடன் இணைந்து நடிக்கிறார் சாண்டி

பிக் பாஸ் நிகழ்ச்சியினைத் தொடர்ந்து, படம் ஒன்றிலும் கவின் உடன் இணைந்து நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார் மாஸ்டர் சாண்டி.

திங்க் ஸ்டுடியோஸ் நிறுவனம் தயாரிப்பில் கென் ராய்சன் புதிய படமொன்றை இயக்கி வருகிறார். இதில் கவின், பிரியங்கா மோகன் உள்ளிட்ட பலர் நடித்து வருகிறார்கள். தற்போது கவின் உடன் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார் மாஸ்டர் சாண்டி. இருவரும் இணைந்து நடிக்கும் முதல் படமாக இது அமைந்துள்ளது.

பிக் பாஸ் நிகழ்ச்சியில் கவின் ஸ்ரீ சாண்டி இருவரின் நட்பு பெரிதாக பேசப்பட்டது. அதனைத் தொடர்ந்து கவின் படங்களுக்கு சாண்டி நடனம் அமைத்தபோதிலும், இருவரும் இணைந்து நடித்ததில்லை.

கவின் ஸ்ரீ சாண்டி இருவரும் இணைந்து நடிக்கும் முதல் படமாக கென் ராய்சன் இயக்கும் படம் அமைந்துள்ளது. இதனை புதிய போஸ்டர் ஒன்றின் மூலம் படக்குழு அறிவித்துள்ளது. ஃபேண்டஸி, காதல், காமெடி என அனைத்தும் கலந்து உருவாகும் இப்படத்துக்கு ஓஃப்ரோ இசையமைத்து வருகிறார். இப்படத்தில் வேறு யாரெல்லாம் நடிக்கிறார்கள் என்பது விரைவில் வெளியிடப்படும் என படக்குழு தெரிவித்துள்ளது.

# தலைவர் தம்பி தலைமையில்' வசன சர்ச்சை: ஜீவா விளக்கம்



'தலைவர் தம்பி தலைமையில்' படத்தின் வசனம் மூலம் உருவான சர்ச்சைக்கு நடிகர் ஜீவா விளக்கமளித்துள்ளார்.

'தலைவர் தம்பி தலைமையில்' படத்தின் ஒரு காட்சியில் "படிச்சு படிச்சு சொன்னேன்டா.. கண்டிஷன்ஸ் பாலோ பண்ணுங்கடா.. கண்டிஷன்ஸ பாலோ பண்ணுங்கடானு.. கேட்டீங்களா" என்று வசனமொன்றை பேசியிருப்பார் ஜீவா. இந்தக் காட்சிக்கு திரையரங்கில் மக்கள் பெரும் வரவேற்பு அளித்தனர். அதுவே இணையத்தில் பெரும் சர்ச்சையை உருவாக்கி இருக்கிறது.

இது தொடர்பாக பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றில் ஜீவா, "டிரெண்டிங் என்ற விஷயத்தை வைத்து தான் அனைத்தும் செய்துக் கொண்டிருக்கிறோம். அந்த இடத்தில் இந்த வசனத்தை பேசினால் நன்றாக இருக்கும் என்று இயக்குநர் சொன்னார். அதை நானும் பேசினேன், அதற்கு பெரிய வரவேற்பும் கிடைத்துள்ளது. அதை மற்றவர்களின் மனதை புண்படுத்தும் நோக்கில் பேசவில்லை" என்று தெரிவித்துள்ளார்.

கரூரில் நடைபெற்ற துயரச் சம்பவத்தின் போது, தமிழக கல்வி அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அழுதுக் கொண்டே பேசிய வீடியோ பதிவொன்று இணையத்தில் வைரலாக பரவியது. அதில் பேசிய வசனத்தைத் தான் ஜீவா 'தலைவர் தம்பி தலைமையில்' படத்தில் பேசியிருந்தார். இதனை முன்வைத்து திமுகவை சார்ந்த பலரும் ஜீவாவை இணையத்தில் விமர்சித்து வருவது குறிப்பிடத்தக்கது.



# 'மரகத நாணயம் 2'வில் பிரியா பவானி சங்கர்

ஆதி, நிக்கி கல்ராணி, முனிஸ்காந்த் நடித்து, 2017ம் ஆண்டில் வெளிவந்த திரைப்படம் 'மரகத நாணயம்'. ஏஆர்கே. சரவண் இயக்கி இருந்தார். ஆக்சஸ் ஃபிலிம் ஃபேக்டரி சார்பில் ஜி.டில்லிபாபு தயாரித்த இந்தப் படம் வரவேற்பைப் பெற்றது. இப்படத்தின் 2ம் பாகம் இப்போது உருவாகியுள்ளது.

பேஷன் ஸ்டுடியோஸ், டங்கல் டிவி, ஆர்டிசி மீடியா, ஆக்சஸ் ஃபிலிம் ஃபேக்டரி, குட் ஷோ ஆகிய நிறுவனங்களின் சார்பில் சுதன் சுந்தரம், மணீஷ் சிங்கால், துர்காராம் சவுத்ரி, தேவ் மற்றும் கே.வி.துரை ஆகியோர் இணைந்து தயாரித்துள்ளனர். இதில் ஆதி, பிரியா பவானி சங்கர் முதன்மை கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

சத்யராஜ், நிக்கி கல்ராணி, முனிஷ்காந்த், ஆனந்தராஜ், டேனி, அருண்ராஜா காமராஜ், முருகானந்தம் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். திபு நினன் தாமஸ் இசை அமைத்துள்ள இப்படத்துக்கு பி.வி.சங்கர் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

இந்தப்படத்தின் விஷுவல் கிளிம்ப்ஸை பேஷன் ஸ்டுடியோஸ் அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ளது. "இன்னும் பிரம்மாண்டமான மாயாஜால காட்சிகள், நகைச்சுவை இந்தப் படத்திலும் இருக்கும்" என்று படக்குழு தெரிவித்துள்ளது.



# முன்னாள் முதல்வர் டாக்டர் எம்ஜிஆர் அவர்களின் 109 வது பிறந்தநாள் விழா

## தமிழ்செல்வன் எம்எல்ஏ பங்கேற்பு

கிருஷ்ணகிரி, ஜன:19-

முன்னாள் முதல்வர் டாக்டர் எம்ஜிஆர் அவர்களின் 109 வது பிறந்தநாளை முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த பெரிய தள்ளபாடி

ஊராட்சியில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன,சட்டமன்ற உறுப்பினர் டி எம் தமிழ்ச்செல்வன் தலைமையில் அதிமுக கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது, பிறகு தூய்மை பணியாளர்களுக்கு இலவச வேட்டி சேலை மற்றும் பொங்கல் பரிசு தொகை வழங்கப்பட்டது, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே இ கே கிருஷ்ணமூர்த்தி,மாவட்ட துணை செயலாளர் சாகுல் ஹமீத், ஒன்றிய கழகச் செயலாளர்கள் ,திருஞானம்,

கலை இலக்கிய அணி ஒன்றிய செயலாளர் செந்தமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்,

மாவட்ட வர்த்தக அணி துணைத் தலைவர் ஹரிஹரன் அவர்கள் ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகள் ஏற்பாடு செய்யப்பட்டன,இந்நிகழ்ச்சியில் தகவல் தொழில்நுட்ப அணி துணைத் தலைவர் சிலம்பு, கிளை செயலாளர்கள் கமல் நாதன், மாயகோபால், சுஜித், முன்னாள் துணைத் தலைவர் சரவணன், நீலமேகம் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் அதிமுகவினர் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்,



# கிருஷ்ணகிரியில் மாற்று கட்சியினர் 50 பேர், மதியழகன் எம் எல் ஏ முன்னிலையில் தி.மு.க.,வில் இணைந்தனர்

கிருஷ்ணகிரி, ஜன. 19-

கிருஷ்ணகிரி மேற்கு நகர, தி.மு.க., சார்பில், 11வது வார்டுக்கு உட்பட்ட பூந்தோட்டம் பகு தியில் திராவிட பொங்கல் விழா நடந்தது. மேற்கு நகர பொறுப்பாளர் அஸ்லம் தலைமை வகித்தார். கிருஷ்ணகிரி, தி.மு.க., கிழக்கு மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ., பேசினார். பின் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். தொடர்ந்து, பல்வேறு கட்சிகளை சேர்ந்த, 50 பேர் அக்கட்சிகளிலிருந்து விலகி தங்களை, தி.மு.க.,வில் இணைத்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி, தி.மு.க., கிழக்கு நகர பொறுப்பாளர் வேலுமணி மற்றும் அப்பகுதியை சேர்ந்த தி.மு.க., நிர்வாகிகள் உள்பட, 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



# பட்டிவீரன்பட்டி அருகே விவசாயம் செழிக்க வாழைப்பழம் சூறை விடும் வினோத திருவிழா

வத்தலகுண்டு, ஜன.19-

திண்டுக்கல் மாவட்டம் பட்டிவீரன்பட்டி அருகே சேவுகம்பட்டியில் 800 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான சோலைமலை அழகர் பெருமாள் கோவிலில் ஆண்டுதோறும் தவறாது மழை பெய்து விவசாயம் செழிக்க தை 3ம் தேதி வாழைப்பழம் சூறைவிடும் திருவிழா நடைபெறுகிறது

ஊரின் எல்லையில் காவல் தெய்வமான ரெங்கம்மாள் கோயிலில் இருந்து பெரிய பாத்திரங்களில் வாழைப்பழங்கள் நிரப்பப்பட்டு மாலை அணிவித்து பூஜை செய்து முக்கிய வீதிகள் வழியாக மேளதாளம், வான வேடிக்கையுடன் வாழைப்பழம் நிரப்பப்பட்ட பாத்திரங்களை ஆண்கள் மட்டுமே தலையில் வைத்து சுமந்து வந்து பெருமாள் கோவில் முன்பு உள்ள மண்டு கோவிலில் பூஜை செய்து வாழைப்பழங்கள் கொண்ட பாத்திரங்களை சோலைமலை அழகர் பெருமாள் கோவிலுக்குள் எடுத்து செல்லப்பட்டு சிறப்பு பூஜை நடைபெற்று முடிந்தவுடன்

கோயிலுக்கு வெளியே காத்திருக்கும் பக்தர்களுக்கு சூறை விட்டனர். பக்தர்கள் கீழே விழுந்த வாழைப்பழங்களை பெருமாளின் பிரசாதமாக வீடுகளுக்கு எடுத்து சென்றனர்

# காவேரிப்பட்டணத்தில் முன்னாள் மாணவர்கள் சார்பில் சங்கமம் தோழமை நிகழ்ச்சி



காவேரிப் பட்டணம், ஜன.19-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணத்தில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் முன்னாள் மாணவர்களின் சங்கமம் தோழமை 30 இன்றுகூடியது. இந்நிகழ்ச்சியில் ரமேஷ் மற்றும் ஆனந்த் அவர்கள் வரவேற்று பேசினார்கள். இந்நிகழ்ச்சிக்கு ஒருங்கிணைப்பாளர் ஜானகிராமன் தலைமை தாங்கினார்.நிகழ்ச்சிக்கு சிவப்பிரகாசம் முன்னிலை வகித்தார்.இந்நிகழ்ச்சியில் காவேரிப்பட்டணம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் வேந்தன் வாழ்த்துரையும், சிறப்புரையாக முன்னாள் ஆசிரியர் பொய்யாமொழி, ராமலிங்கம், முனியன், பால சுப்பிரமணியம்,செல்வகுமார், பாஷா, கணேசன், கோவிந்தராஜன் கார்மேககண்ணன், முரளி ஆசிரியைகள் அருணா, நளினி, காந்திமதி ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். அவர்களுக்கு முன்னாள் மாணவர்களின் சார்பாக நினைவு பரிசு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியினை முன்னின்று சசிகுமார், செந்தில், சிவகுமார், சுதன், ராஜசேகர் மற்றும் நண்பர்கள் அனைவரும் சிறப்பாக நடத்தினர்.

இதில் முன்னாள் மாணவர்கள் மாணவிகள் 500 பேர் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சியில் முன்னாள் மாணவர்கள் தங்களின் பழைய நினைவுகளை நினைவு கூறும் வகையில் தேன் மிட் டாய், கடலை மிட்டாய், எலந்த பழம், சாக்லேட் உள்ளிட்ட உணவு பொருள்களை ஒருவர் கொடுத்து பரிமாறி கொண்டனர். இதைத்தொடர்ந்து பிரம்பால் ஆசிரியரிடம் அடிவாங்கியும், தோப்பு கரணம் போட்டு மகிழ்ந்தனர்.



# முன்னாள் முதலமைச்சர் எம்ஜிஆர் 109 ஆவது பிறந்தநாள் விழா : அதிமுக சார்பில் மாலைஅணிவித்து மரியாதை

பெரியகுளம் ஜன. 19-

தேனி மாவட்டம் பெரியகுளத்தில் அஇ அதிமுக கழக நிறுவன தலைவர் முன்னாள் முதலமைச்சர் எம்ஜி ராமச்சந்திரன் அவர்களின் 109வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்பு கழகம் சார்பில் கழக ஒருங்கிணைப்பாளர் முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் ஆணைக்கிணங்க பெரியகுளம் வடகரை அரண்மனை தெரு பகுதியில் வைக்கப்பட்டுள்ள எம்ஜிஆர் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி மக்களுக்கு இனிப்புகள் வழங்கினர். அதனைத் தொடர்ந்து தமிழகம் முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த எம்ஜிஆர் திரு உருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் அஇ அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்பு கழகம் பெரியகுளம் நகர் கழகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கழக அமைப்புச் செயலாளர் ஓ. சண்முகசுந்தரம், பன்னீர்செல்வம், சேது பொன். ரங்கராஜ் ஜின்னா வி. டி.எஸ். ராஜவேலு, முன்னாள் கவுன்சிலர் சுந்தர் ராஜா முத்து,செல்வம் அன்பு,குமரேசன், சேகர் ராசு உட்பட மாவட்ட நகர ஒன்றிய கழக நிர்வாகிகள் பேரூர் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ திண்டுக்கல் ஆயுதப்படை வளாகத்தில் திண்டுக்கல் மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலாத்துறை சார்பில் நடைபெற்ற "கலையுடன் காணும் பொங்கல்" திருவிழாவில் வெற்றி பெற்ற பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். அருகில் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம் அவர்கள், மாவட்ட சுற்றுலா அலுவலர் ஹ.கோவிந்தராஜ் உட்பட பலர் உள்ளனர்

# "அதிமுக ஒன்றிணையாமல் திமுகவை வீழ்த்த முடியாது" ஓபிஎஸ் மீண்டும் திட்டவட்டம்

சென்னை, ஜன.19–

எம்ஜிஆரின் 109வது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை அண்ணா சாலையில் உள்ள எம்ஜிஆர் சிலைக்கு முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: 2026 சட்டப்பேரவை தேர்தலில் யாருடன் கூட்டணி என்பதை ஓரிரு தினங்களில் அறிவிப்பேன். எம்ஜிஆர் உருவாக்கிய சட்ட விதிப்படிதான் எம்ஜிஆரும், ஜெயலலிதாவும் அதிமுகவை வளர்த்து வந்தனர். அதிமுகவில் இருந்து பிரிந்து இருக்கும் சக்திகளை ஒன்றிணைக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில் இப்போது உள்ள அதிமுகவால் திமுகவை வீழ்த்த முடியாது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# காவேரிப்பட்டணம் அருகே உள்ள ஆயிரம் ஆண்டு பழமை வாய்ந்த பென்னேஸ்வர மடத்தில் தை அமாவாசை முன்னிட்டு ஐந்தாயிரத்திற்கும் அதிகமான மக்கள் முன்னோர்களுக்கு தர்ப்பணம்



காவேரிப்பட்டணம், ஜன.19-

காவேரிப் பட்டணத்தில் காசிக்கு நிகரான புண்ணிய தளமாக விளங்கி வரும் சிவ ஆலயம் பெண்ணேஸ்வர மடம் கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரி பட்டணம் அருகில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்டு அருள் பாலித்து விளங்கிவரும் ஓர் சிறப்பு ஆலயம் தை மாத அமாவாசையில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் தருவதின் மூலமும் பாவங்கள் விலகி புண்ணியம் சேரும் துன்பங்கள் விலகி இன்பங்கள் பெருகும் தோல்விகள் விலகி வெற்றிகள் குவியும் கவலைகள் மறந்து மனதில் புன்னகை பூக்கும் மன கவலைகள் விலகி மனம் அமைதி பெறும் மேலும் வீட்டில் சுப காரியங்கள் நடைபெறும் நேர த்தில் தடை தாமதங்கள் ஏற்படாது. எப்பேர்ப்பட்ட சாபமும் தோசமும் நீங்கும் தீய சக்தியும் குடும்பத்தை அண்டாது குடும்ப ஒற்றுமை மேலோங்கும் எல்லா வளங்களும் நலங்களும் பெற்று நலமுடன் வாழ வழி கிடைக்கும் என்பது ஐதீகம் காவேரிப்பட்டணம் அடுத்த பெண்ணேஸ்வர மடம் தென்பெண்ணை ஆற்றங்கரை ஓரத்தில் அமைந்துள்ளதால் இன்று முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுக்க ஐந்தாயிரத்திற்கும் அதிகமானோர் தென்பெண்ணை ஆற்றில் குளித்து அங்கு புரோகிரர்களால் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுக்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு தென்பெண்ணை ஆற்றிலேயே முன்னோர்களுக்கு தர்ப்பணம் திதி கொடுத்து அருகில் உள்ள ஆலயத்தில் சுவாமியை தரிசனம் செய்தனர்.

ஐந்தாயிரம் மக்கள் இங்கு ஒரே நாளில் குவிந்ததால் அப்பகுதியில் போலீசார் குவிக்கப்பட்டு எந்த இது அசம்பாவித நிகழ்ச்சியும் நடைபெறாமல் பார்த்துக் கொண்டனர்.

# ஓசூருக்கு, நாளை தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு வருகை : மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை

கிருஷ்ணகிரி,ஜன.19-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் டி.மதியழகன் எம்.எல்.ஏ. வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணைப்படி, துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழிகாட்டுதல்படி 2026 சட்டசபை தேர்தலுக்காக தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு அமைக்கப்பட்டுள்ளது. துணை பொதுச்



செயலாளர் கனிமொழி எம்.பி. தலைமையில் டி.கே.எஸ்.இளங்கோவன், கோவி.செழியன், பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், டி.ஆர்.பி. ராஜா, எம்.எம். அப்துல்லா, கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், டாக்டர் எழிலன் நாகநாதன், கார்த்திகேய சிவசேனாபதி, . ஆ.தமிழரசி ரவிக்குமார், ஜி.சந்தானம், சுரேஷ் சம்பந்தம் ஆகிய 12 பேர் அடங்கிய குழுவினர் இதில் இடம் பெற்றுள்ளனர். அவர்கள் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், ஓசூரில் மாநகராட்சியில் உள்ள ஆனந்த் கிராண்ட் பேலஸ் திருமண மண்டபத்தில் நாளை (திங்கட்கிழமை) காலை 9 மணிக்கு பொதுமக்கள், தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளைக் கேட்க உள்ளனர். எனவே கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் முனைப்புடன் செயல்பட்டு வணிகர் சங்கங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், தொழிற்சங்கங்கள், தொழில் முனைவோர், மாணவர் சங்கங்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அழைத்து வந்து திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவினரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டுமென கேட்டு கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161